# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
# பொலிஸ் ஊடகப் பிரிவு
# POLICE MEDIA DIVISION
சுகுறுபாய, பத்தரமுல்லை

| | | | |
|---|---|---|---|
| තැ.පෙ.අංකය<br>த. பெ.இ<br>Po.Box No | 10120 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2171635 |
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2887973<br>(HUNTING) | වෙබ් ලිපිනය<br>இணையதளம்<br>Web Site | www.Police.lk |
| ඊ මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dir.media@police.gov.lk | | |


| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இலக்கம்<br>My NO | 1782 /2024 | ඔබේ අංකය<br>உமது இலக்கம்<br>Your No | / 2024 |
| දිනය<br>திகதி<br>Date | **30/11/2024**<br>**நேரம் 1310 மணி** | | |

## ஊடக அறிக்கை

**நாட்டில் ஏற்பட்ட சம்பவங்கள் மற்றும் முக்கியச் செய்திகள் தொடர்பாக பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை ஊடகங்களுக்கு தெரியப்படுத்தல்.**

### 01. மனிதப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது – கிரேன்ட்பாஸ் பொலிஸ் பிரிவு.

25.11.2024 அன்று கிரேன்ட்பாஸ் பொலிஸ் பிரிவிட்குறப்பட்ட ஒருகொடவத்தை பிரதேசத்தில் வைத்து கூரிய ஆயுதத்தில் தாக்கப்பட்டதில் வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 17 வயதுடைய நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இக்குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் 29.11.2024 அன்று பகல் வேளையில் வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவிட்குறப்பட்ட புதுக்கடைப் பிரதேசத்தில் வைத்து கிரேன்ட்பாஸ் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 34 வயதுடைய ஒருகொடவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

மேலும், இக் குற்றத்துடன் தொடர்புடைய 04 சந்தேக நபர்கள் இதற்கு முன்னர் கொழும்புக் குற்றப் பிரிவினர்களால் கைது செய்யப்பட்டதுடன் இவர்கள் இக் குற்றத்திற்காக பயன்படுத்திய இரண்டு வாள்கள் மற்றும் கத்தி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது 10.12.2024 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

கிரேன்ட்பாஸ் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 02. காட்டு யானை தாக்கியதில் நபர் பலி – பூனே பொலிஸ் நிலையம்.

29.11.2024 அன்று இரவு வேளையில் பூனே பொலிஸ் பிரிவிட்குற்பட்ட பூனே கடற்படை முகாமிற்கு அருகாமையில் காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பூனே பொலிசாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாத்தலான, நிட்டம்புவை பகுதியினைச் சேர்ந்த 41 வயதுடைய, புனே கடற்படை முகாமில் கடமையாற்றும் லுதினன் கொமான்டர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் கடற்படை முகாமிற்கு அருகாமையிலுள்ள கடையொன்றுக்குச் சென்று இரவு சாப்பாடு பார்சல் ஒன்றை வாங்கி மீண்டும் முகாமிற்கு திரும்பும் போதே காட்டு யானைத் தாக்கி உயிரிழந்துள்ளதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது. பூனே பொலிசார் மேலதிக் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**